பக்கங்கள்:-14 + XVI

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 26 | புதன்கிழமை | 13.09.2023 | அதிர்வு 43

## ரயிலிருந்து தவறி வீழ்ந்து பல்கலை மாணவன் சாவு!

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயில் ஒன்றின் கூரை மீது அமர்ந்து பயணித்த ஒருவர் உயிரிழந்தார். ரயில் பணியாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பால்

02




# தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யுங்கள்!

## இலங்கை அரசிடம் இந்தியா வலியுறுத்து

"நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத் துக்கான தமிழ் மக்களின் அபிலா ஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்தி யுள்ளது.

02

# ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது!



## கத்தோலிக்க திருச்சபை தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக "சனல் 4" முன்வைத் துள்ள குற்றச்சாட்டுகளை விசாரிப் பதற்காக ஜனாதிபதியால் நியமிக் கப்படும் ஆணைக்குழுவிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாது என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோது, பேராயர் கர்தினால்

06

# நல்லூரில் ஜனநெரிசல் 5 பக்தர்கள் மயங்கினர்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்று வீதியில் கோயிலுக்குப் பின்புறமாக நேற்று முன்னிரவு ஏற்பட்ட சனநெரிசலால் திடீர் தள்ளுமுள்ளு நெருக்கடி ஏற்பட்டது.

06












## இரகசியம்

தான் இழைக்காத தவறுக் காகத் திட்டு வாங்கும் அப்பாவி களைப் பார்த்திருக்கிறீர்களா? நேற்று ஓர் அதிகாரியை அப்ப டிப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத் தது. வேறு யாரும் அல்லர் அவர். யாழ் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் தான் அந்தப் பாவி

03

# தையிட்டி விகாரையை அகற்றுங்கள் மக்களின் காணிகளை வழங்குங்கள்!

## அளவீட்டுக்கு எதிரான போராட்டத்தில் கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் அழுத்தம்



– எஸ்.நிதர்ஷன் –

“யாழ். தையிட்டி விகாரை அகற்றப்பட்டு மக்களுடைய காணிகள் வழங்கப்பட வேண்டும். அதுதான் மக்களுடைய வேண்டுகோளாகவும் இருக்கின்றது.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

தைட்டியில் நேற்று நடைபெற்ற காணி அளவீட்டுக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தையிட்டி விகாரைக் காணியை அளவீடு செய்து விகாரைக்கு வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட பல பேர் இங்கே திரண்டு அளவீட்டு விடயத்தைத் தடுத்திருக்கின்றார்கள்.

மிக முக்கியமாக மக்கள் இங்கு திரண்டதாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி சார்ந்தவர்கள் வருகை தந்ததாலும் இந்த அளவீட்டுத் திட்டம் நிறுத்தப்பட்டது என உணரப்படுகின்றது.

இருந்தாலும் கூட இதற்கான மாற்றீட்டு காணி அல்லது வேறு இடங்கள் என்று சொல்லப்படுவதெல்லாம் ஒரு ஏமாற்று வித்தைகள்,

மிக முக்கியமாக இந்த மக்களுடைய காணி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

எந்தவித அனுமதியும் இல்லாமல் கட்டப்பட்ட இந்த விகாரை அகற்றப்பட்டு காணி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுதான் இந்த மக்களுடைய வேண்டுகோளாகவும் இருக்கின்றது.”

– என்றார்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம்தொடர்பில்மனிதஉரிமைகள்பேரவையின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்–நஷீப்பும், அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

இந்தநிலையில், இந்தியா சார்பில் பேரவையில் மணி பாண்டே உரையாற்றுகையில்,

“அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்பு நாடு என்ற ரீதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றம் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் ஆகிய வற்றை முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது.

அதுமாத்திரமன்றி இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதாரநெருக்கடியைஉரியவாறுகையாள்வதற்குச் சுமார் 4 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய உதவிகளை இந்தியா வழங்கியிருக்கின்றது.

இந்தியா எப்போதும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றது. நீதி, சமத்துவம், கௌரவம், சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவையே அவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு பூர்த்தி செய்யும் என்றும், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவது குறித்து இலங்கை அரசு வழங்கியிருக்கும் உத்தரவாதத்தைக் கவனத்தில்கொள்ளும் அதேவேளை, அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை. ஆகவே, அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கடப்பாடுகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

# என்னை ஏமாற்றினார் ஆஸாத் மௌலானா!

### கல்முனை நீதிமன்றில் பெண்ணொருவர் வழக்குத் தாக்கல்

(பாறுக் ஷிஹான்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படத்தின் தகவலாளரான ஆஸாத் மௌலானாவுக்கு எதிராகப் பெண் ஒருவரால் கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து மோசடியான முறையில் அவர் தன்னைத் திருமணம் செய்து ஏமாற்றினார் என்று தெரிவித்து குறித்த பெண் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 35 வயதான பெண்ணே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.



இந்த வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டதுடன் முறைப்பாட்டின் உண்மைத் தன்மை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ரயிலிலிருந்து தவறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சன நெரிசல் காணப்பட்டமையால் அவர் நேற்றுக் காலை ரயிலின் கூரை மீது அமர்ந்து பயணித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹொரப்பே பகுதியில் அவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கம்பஹா மொரகொட பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய மொரட்டுவைப் பல்கலைக் கழக மாணவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சிங்கப்பூரிடமிருந்து பெட்ரோல் வாங்க அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை

சிங்கப்பூரின் எரிசக்தி நிறுவனமான விட்டொல் ஏசியாவிடமிருந்து 92 ஒக்டேன் பெட்ரோல் அடங்கிய நான்கு கப்பல்களை பெறுவதற்கான கொள்முதல் பத்திரத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வரையிலான 4 மாத காலப்பகுதியில், இந்தப் பெட்ரோலைக் கொள்வனவு செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்திற்காக, இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்காக நான்கு விலைமனுக்கள் பெறப்பட்டிருந்த நிலையில், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் பரிந்துரையின்படி, மேற்படி சிங்கப்பூர் நிறுவனத்திற்கு உரிய கொள்முதல் வழங்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மனிதர்.

நல்லூர் கோவிலுக்கு வந்த பலரின் வாயிலும் அவரின் பெயர் சொல்லித்தான் அர்ச்சனைகள் – வசவுகள் – திட்டுகள் – நடந்தமையை அவதானிக்க முடிந்தது.

நல்லூர் திருவிழாவில் சனக்கூட்டம் அதிகரித்து வருவதை என் பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் கோடி காட்டி இருந்தேன்.

லட்சத்தைத் தாண்டி மக்கள் கூடும் இடங்களில், அவர்களை ஒழுங்குபடுத்துவது என்பது ஒரு கலை. நிபுணத்துவப் பணி. முட்டாள்தனமாக அதைச் செய்ய முடியாது.

நல்லூர் திருவிழாவில் அப்படித்தான் அதைச் செய்கின்றார்களோ என்று எண்ணத் தோன்றும் விதத்தில் காரியங்கள் நடந்திருக்கின்றன.

வழக்கமாக பல்லாயிரத்தைத் தாண்டி மக்கள் ஒரே சமயத்தில் கூடும் இடங்களில், அவர்கள் வரவும் செல்லவும், பல வழிகளை வைத்திருப்பார்கள். புதிய வாசல்களை திறப்பார்கள். ஆனால் நல்லூரில் தலைகீழாக நடக்கின்றது.

மக்கள் கூடும் இடங்களில் வாகனங்கள், வண்டிகள் போன்றவற்றின் வருகையைக் கட்டுப்படுத்தத் தடைகள் போடப்படுவது நியாயம். ஆனால் நடந்து வரும் பக்தர்கள் செல்வதற்கு அடைப்புகளைப் போட்டு, கட்டுப்பாடுகளை அமைத்து, மக்கள் திரண்டு கட்டுடைக்கும் நிலைமைகளைத் தேடி ஏற்படுத்துவது முட்டாள்தனமானது.

நல்லூரைப் பொறுத்தவரை கோவிலின் பின்புறம் உள்ள பருத்தித்துறை வீதியை முற்றாகத் தடை செய்து அடைத்திருந்தமை குறித்து பல நூற்றுக் கணக்கானோர் விசனம் தெரிவித்து வந்தனர். முகப்புத்தகங்களிலும் விமர்சித்தனர்.

அந்த வீதியை ஏன் முற்றாக – ஒரு சிறு பிராணி கூட அந்தப் பக்கம் இந்தப் பக்கம் கடந்து செல்ல முடியாதவாறு – அடைப்புப் போட்டு மறைத்தார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணத்தைத் தேடினேன். யாரும் சரியான பதிலைச் சொல்லவில்லை.

நேற்றுக் கோயிலின் பின்புறத்தில் ஏற்பட்ட ஜன நெரிசலில் பலர் மயங்கினர். பக்தர்கள் மிதிபட்டு பேரவலம் நேர முன்னர் அங்கிருந்தோர் விரைந்து நிலைமைகளை ஒழுங்குபடுத்தி, சுமுகநிலைமையைக் கொண்டு வந்தனர்.

அப்போதுதான் அந்த வீதியை தேவையின்றி – சரியான காரணம் வெளிப்படுத்த முடியாத நிலையில் – மூடி வைத்திருக்கும் முட்டாள்தனம் பலருக்கும் உறைத்தது. ஆவேசம் கொண்ட இளைஞர் கூட்டம் ஒன்று அந்தப் பாதையை உடைத்துத் திறந்து விட்டது.

நேற்று நள்ளிரவுக்கு பின் – இன்று அதிகாலை – அந்த வீதியைத் திறந்து விடும் வேலையை யாழ் மாநகர சபை அவசர அவசரமாகத் தானே முன்னெடுத்தது. இதை நேரத்துடனேயே செய்திருக்கலாம்.

“அந்தப் பாதையை ஏன் மூடினீர்கள்? அது விவேகமான செயலாகப் படவில்லையே!” – என்று யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் நேற்று இரவு உரிமையுடன் சீறினேன்.

“கோவிலைச் சூழ உள்ள வீதித் தடைகளை அமைக்கும் வேலையை நாங்களே – மாநகர சபையே – செய்கிறோம். ஆனால் இந்த வீதி தடை எங்களால் போடப்படவில்லை. அதில் எங்கள் ஊழியர்கள் பங்காற்றவில்லை. அதற்கு மேல் அது குறித்து பொறுப்பு கூறவும் பதிலளிக்கவும் எனக்கு விடயம் இல்லை.” – என்று பொறுப்புத் துறந்தார் அவர்.

“ஆனால் கோயிலுக்கு வருவோர், போவோர் அந்த வீதி மூடப்பட்டமைக்காக உங்கள் தலைமையிலான யாழ் மாநகர சபையைத் தானே திட்டித் தீர்க்கின்றார்கள். அது தெரியுமா?” என்று நான் வினவினேன்.

‘தெரியும். நான் அதற்கு என்ன செய்ய முடியும்? எல்லாம் முருகன் பார்த்துக் கொள்வான்.” – என்றார் அவர்.

உண்மைதான். அது அவர் தவறல்ல. கோயில் நிர்வாகம்தான் தம்மிஷ்டப்படி அந்த வீதி மறிப்பை – அந்தப் பக்கம் இந்தப் பக்கம் தெரியாதவாறு – அடைத்துப் போட்டு மூடியதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின.

எது, எப்படியாயினும் மக்கள் பல்லாயிரம் பேர் ஒன்று கூடும் இடம் தொடர்பில் இத்தகைய முடிவை ஒரு தரப்பு மாத்திரம் எடுக்க முடியாது. எடுக்கக் கூடாது. கோவிலுக்குள் கோவில் நிர்வாகம் எடுக்கும் முடிவை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. உட்படுத்துவதில்லை. உட்படுத்தக் கூடாது.

ஆனால், அதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பரந்த பருத்தித்துறை வீதியை – ஒரு நாய் கூட இந்தப் பக்கம் அந்தப் பக்கம் போய் வர முடியாதவாறு – பெரும் தடுப்பு போட்டு மூடும் முடிவை கோவில் நிர்வாகம் எடுத்தது, நாம் பார்த்திருந்தோம் என்று இந்த விடயங்களைக் கையாளும் யாழ் மாநகர சபை கூற முடியாது என்பதுதான் என் கருத்து.

நேற்றைய ஜனநெரிசல் சற்று மோசமாகி, உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தால்,இவ்விடயத்தில்யார்பொறுப்பு என்று பந்தாட முடியாது. இக்கட்டுத்தான் வந்திருக்கும். எல்லாம் நல்லூரான் அருள். அவன் அனர்த்தம் நேராமல் காத்து விட்டான்.

திருவிழாவை ஒட்டிக் கூடும் வர்த்தக நிலையங்களை ஒரு புறமாக பெரும் எண்ணிக்கையில் அமைத்திருக்கிறார்கள். கோவிலுக்கு நான்கு வீதிகளில் இருந்து வரும் பக்தர்கள் கோவிலில் வணக்கத்தை முடித்துக் கொண்டு அந்தக் கடை தெருக்கள் பக்கம்தான் போவார்கள். அது வழமை. ஆனால் அந்தக் கடைத்தெரு பக்கம் போக முயலும் பக்தர்கள் கூட்டத்துக்குத் தடை போடுமாற்போல இந்த வீதித் தடை.

இதனால், நான்கு வீதிகள் மூலம் வரும் பக்தர்கள் கோவிலில் கும்பிட்டு விட்டு, ஒரு குறுகிய வீதி வழியாகவே கடைகள் அமைக்கப்பட்ட பகுதிக்குச் செல்லும் இக்கட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதிக்கு செல்வதற்கு அகல விரிந்திருந்த பாதை, கோவில் நிர்வாகத்தால் மூடப்பட்டிருந்தது என்று கூறி அனர்த்தம் நேரும் சமயத்தில் யாரும் தப்பி விட முடியாது.

கோவிலுக்கு வருவோர். போவோருக்கான ஒழுங்கில் கோவில் நிர்வாகம் சம்பந்தப்படலாம். ஆனால் கும்பிட்ட பின்னர் பக்தர்கள் கடைத்தெருத் தொகுதிக்குச் செல்வதற்கான பாதையை தடுக்கும் பொறுப்பு கோவில் நிர்வாகத்துக்குரியது அல்ல. அதை அவர்கள் செய்யக்கூடாது. கடைத்தொகுதி அமைப்பதைக் கண்காணித்து, வரி வசூலிக்கும் யாழ் மாநகர சபை அந்தப் பாதையைக் குறைந்தபட்சம் தனக்குத் தன்னும் நியாயப்படுத்தும் காரணமின்றி அது மூடப்படுவதற்கு அனுமதித்து வாளாவிருந்திருக்கக் கூடாது.

எவ்வாறாயினும் அந்தப் பாதையும், கோயில் முன்புறத்தில் போடப்பட்டிருந்த இரண்டு மேலதிக தடைகளும் இன்று அதிகாலை நீக்கப்பட்டமை மூலம் தவறுகள் திருத்தி அமைக்கப்பட்டு இருக்கின்றன எனத் தெரிகிறது.

இனிமேலாவது தரப்புக்கள் எல்லை மீறாமல் நடந்து கொண்டால் நல்லது.

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருக்கமான பிரதானிகளில் ஒருவரான சாகல ரட்னாயக்கா இன்று தேரேறி வரும் முருகனைத் தரிசிக்க விமானத்தில் யாழ் வருகின்றார் என்று ஒரு தகவல் கிட்டியது.



# நல்லூரான் சப்பறத் திருவிழா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் 23ஆம் நாள் மாலை உற்சவமான சப்பறத்திருவிழா நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமதேராக முருகப்பெருமான் சப்பறத்தில் வீதியுலா வந்தார்

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்










# ‘சனல் 4’ பற்றி சர்வதேச விசாரணை ஐ.நாவிடம் நான் நேரில் கோருவேன்

## மைத்திரிபால சிறிசேன விடாப்பிடி

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் – 4 வெளியிட்டுள்ள வீடியோ தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு ஐ.நாவிடம் நேரில் கோரிக்கை விடுக்கவுள்ளேன்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“சனல் – 4 தொடர்பில் விசாரணை அவசியம் என ஐ.நாவும் வலியுறுத்தியுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதியைச் சந்தித்து, சர்வதேச விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கவுள்ளேன்.

4 வருடங்களாக என்னை இலக்கு வைத்துதான் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், நடந்தது என்ன என்பது



சனல் – 4 வீடியோ ஊடாகத் தெளிவாகின்றது.” – என்றார்.

# 3 நாள்களுக்கு முன் உயிரிழந்த சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்

## மயங்கிக் கிடந்த பேத்தியார் வைத்தியசாலையில்!

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றிலிருந்து இன்று மதியம் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ் மாவட்ட நீதவின் நேரில் சென்று பார்வையிட்டார். உயிரிழந்த சிறுமி திருகோணமலையைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுமியுடன் அறையில் தங்கியிருந்த பேத்தியார் மயக்க நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

மேலும் சிறுமி 3 நாள்களுக்கு முன்னரே இறந்து விட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீண்டுமொரு போர் ஏற்பட வாய்ப்பே இல்லை!

## அடித்துக் கூறுகின்றார் அநுரகுமார



“உள்நாட்டுப் போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். எனவே, வடக்கில் மீண்டுமொரு பலமான ஆயுதப் போராட்டம் உருவாவதற்கான சாத்தியம் இல்லை, அதற்கான வாய்ப்பு அரிதிலும் அரிது என்றே கூறவேண்டும்.” –

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“இலங்கையில் பல்லின சமூகம் வாழ்கின்றது, பல கலாசாரம் இருக்கின்றது. தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் இவர்களுக்கிடையில் நல்லிணக்கம், ஐக்கியம் என்பன மிக அவசியம். போர் முடிவடைந்த பின்னர் நல்லிணக்க அமைச்சுக் கூட உருவாக்கப்பட்டது. அரசியல் செய்வதாக இருந்தால் அவர்களுக்கு இங்கு இன ஐக்கியம் இருக்கக்கூடாது, அதனால் அரசியல் ரீதியில் மக்களை பிளவுபடுத்தினர்.

2009 இல் போர் முடிவடைந்த பிறகு ஒன்றரை தசாப்தகாலத்துக்குள் இலங்கையில் மீண்டும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெறும் என நினைத்தீர்களா? எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அரசியல்வாதிகளுக்கு ஆட்சியை பிடிக்கவேண்டிய தேவைப்பாடு இருந்தது.

2015 இல் ஆட்சியை இழந்த பின்னர் வேலையை மீண்டும் ஆரம்பித்தனர், வடக்கில் மீண்டும் ஒரு போர் பற்றிய தகவல்களை பரப்பினர். புலிகளின் நிழல் என்றெல்லாம்கூட நிறைய செய்திகள் உருவாக்கப்பட்டன.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த முப்படையினருக்குப் புலிகள் அமைப்பு மீள வருவது தொடர்பில் போர் சார்ந்த கருத்தொன்று இருக்கலாம். எனக்கு அரசியல் கருத்தொன்றும் உள்ளது. அதாவது வடக்கில் மீண்டும் பலமான ஆயுதக்குழுவொன்று உருவாகுவதற்கான சாத்தியம் மிகக்குறைவு. அதற்கு இடமில்லை.

ஏனெனில் போரால் வடக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள், எந்நாளும் போரை எதிர்கொண்டனர், ஆயுதக் குழுக்களிடையில் மோதல் இருந்தது, இந்திய இராணுவத்துடன் மோதல் இருந்தது, 30 வருட போரால் வடக்கே பெரிதும் பாதிக்கப்பட்டது. அங்குள்ள தாய்மாருக்கு தமது பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டும், சிறந்த வேலைக்கு அனுப்ப வேண்டும், தமது பிள்ளைகளை மணம்முடித்துவைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்காதா? ஆனால், வடக்கு இளைஞர்கள் யுத்தத்துக்காகவே பிறந்தவர்கள் என்ற எண்ணம் தெற்கில் விதைக்கப்படுகின்றது.

2015 இற்கு பிறகே புலிகளின் எழுச்சி பற்றி அதிகம் செய்திகள் பரப்பட்டன, ஆவா குழு பற்றிக்கூட அச்சம் கிளப்பட்டது, 2015 – 2017 காலப்பகுதிக்கு பின்னர் அது பற்றி பேசப்படவில்லை. அதன் பின்னர் முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி கதைக்கப்பட்டது.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வீதி விழிப்புணர்வு அவசியம்

வீதி விபத்துக்கள் தொடர்பாக வெளியாகியுள்ள புள்ளி விவரங்கள் மலைப்பை ஏற்படுத்துவனவாக உள்ளன.

இலங்கையில் ஒரு நாளைக்கு சராசரியாக 10 பேர் என்ற அளவில் வீதி விபத்துகளில் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன.

இந்த ஆண்டு கடந்த எட்டு மாதங்களில் 1,427 மோசமான வீதி விபத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் 1,500 உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விபத்துகளில் அதிகமானவை மோட்டார் சைக்கிள்கள் - இருசக்கர வாகனங்கள் - சம்பந்தப்பட்டவை என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் மோட்டார் சைக்கிள் தொடர்பான மோசமான 612 விபத்துக்கள் நடந்துள்ளன. அவற்றில் 630 மனித உயிர்கள் இழக்கப் பட்டு இருக்கின்றன.

2013 ஆம் ஆண்டில் நாட்டில் 38 லட்சமாக இருந்த பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 10 ஆண்டுகளில் 83 லட்சமாக உயர்ந்துள்ளது. இதில் அரைவாசி அதாவது - 41 லட்சம் - மோட்டார் சைக்கிள் ரகத்தைச் சேர்ந்த இருசக்கர வாகனங்கள். மூன்று சக்கர ஓட்டோக்களின் எண்ணிக்கை 11 லட்சத்து 85 ஆயிரம்.

கவனயீனமான சாரத்தியம் - ஹெல்மெட் அணியாமை - ஹெல்மெட்டைச் சரியாக அணியாமை - போன்றவைதான் பெரும்பாலும் இரு சில்லு வாகனங்களின் விபத்துகளில் உயிரிழப்புகளுக்குப் பிரதான காரணமாக இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

போதையில் சாரத்தியம் செய்பவர்களால் ஏற்படும் விபத்துகளும் அதிகம். அவை இரு சக்கர வாகனங்களுக்கு என்று இல்லாமல் எல்லா வாகனங்களுக்கும் பொதுவான பிரச்சினை. குறிப்பாக பஸ்கள், லொறிகள் போன்ற பாரவூர்திகளைச் செலுத்துவோரில் கணிசமானோர் போதைப் பழக்கத்துக்கு உட்பட்டு இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் வாகனங்கள் பெருகிய அளவுக்கு போக்குவரத்து வீதிகள் விருத்தி செய்யப்படவில்லை. அதனால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல்களும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமைக்கான காரணிகளில் ஒன்று.

எது, எப்படியோ வடக்கில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் பாதிப்புகள் ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது இளம் சமுதாயத்தின் பொறுப்பற்ற - விட்டேத்தியான - கவனக்குறைவான - மிதப்பான - சாரத்தியம் என்பது பலராலும் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றமை அவதானிக்கத்தக்கது. பல சமூக காரணிகள் இந்நிலைக்குக் காரணம்.

நாட்டில் இப்போது பெருகி வரும் விபத்துகளை வெறுமனே சட்ட - ஒழுங்கு விதிகள், பொலிஸார், நீதி மன்றங்கள் மூலம் கட்டுப்படுத்தி - ஒழுங்குபடுத்தி - நேர் சீர் செய்து - விடலாம் என்று நம்புவது அபத்தமானது; அர்த்தமற்றது. நிலைமை எல்லை மீறாமல் இருப்பதற்கு இவை உதவக் கூடும். அவ்வளவே.

இவற்றை எல்லாம் தாண்டி, விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வை சமுதாய மட்டத்தில் ஆழமாக நாம் ஏற்படுத்த வேண்டும். இது விரிவான - பரந்த - ஒரு விடயம். சமூகச் சிற்பிகள் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பான அம்சம் இது.

## நல்லூரில் ஜனநெரிசல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனநெரிசலில் சிக்கி ஐந்துக்கு மேற்பட்டோர் மயக்கமடைந்தனர்.

யாழ் மாநகரசபைத் தொண்டர்கள், சாரணர்கள், பொலிஸார், பொதுமக்கள் தரப்பில் இளைஞர்கள் எனப் பலதரப்பினரதும் கூட்டு நடவடிக்கையால் ஜனநெரிசல் கட்டுப்படுத்தப்பட்டு, நிலைமை ஒழுங்குக்குள் கொண்டு வரப்பட்டது.

சனநெரிசல் கட்டுக்குள் கொண்டு வரப்படாமல் குழப்ப நிலை நீடித்திருந்தால் அங்கு பெரும் அனர்த்தம் நேர்ந்திருக்கும். தெய்வாதீனமாக ஒரு சிலரின் மயக்கத்தோடு பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நல்லூர் சப்பரத் திருவிழா நடைபெற்று நிறைவடைந்த நிலையில் பக்தர்கள் வருகை தரவும் போவதற்கும் குறுகலான இடம் விட்டுப் பாதைத் தடை போடப்பட்டிருந்தமையால் பெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பருத்தித்துறை வீதி ஊடாக அரசடி வீதிப் பக்கம் செல்லும் பாதை கோயிலின் தெற்கு வாசலை அண்டி முற்றாக மூடப்பட்ட நிலையில், மற்றைய சிவன்கோவில் பாதையிலும் மாநகர சபை போட்ட தடுப்புக்கள் முற்றாக விலத்தப்படாத நிலையில் சனநெரிசல் அதிகரித்து பலர் மூச்சுத்திணறலால் அவதியுற்றமையுடன் மயங்கியவர்களை மீட்பதற்கான அம்புலன்ஸ்கள் அருகில் இருந்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இருந்து வருவதிலும் நெருக்கடி ஏற்பட்டது.



இந்த ஜனசமுத்திர நெரிசலைச் சாதகமாக பயன்படுத்திய விஷமிகள் அங்க சேஷ்டையில் ஈடுபட்டனர். திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டினர். அத்தகைய திருடர் ஒருவர் கையும் களவுமாகப் பிடிபட்டார். அந்நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமையுடன் சில நகைகளும் அந்தச் சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழு உடனடியாக கோவில் அருகில் ஆலயத்தினரால் போடப்பட்ட வீதித்தடைகளை தளர்த்தி பக்தர்கள் செல்ல வழி ஏற்படுத்தினர்.

பருத்தித்துறை வீதியை மறித்து நல்லூர் கந்தசுவாமி கோயில் நிர்வாகத்தினால் இரும்பு தகடுகளால் அடைக்கப்பட்ட பாதையும் இதன்போது பக்தர்களால் உடைக்கப் பட்டது.

சப்பரத் திருவிழாவிலேயே இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டால் இன்று தேர்த்திருவிழாவில் இந்நிலை மோசமாகும் என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் யாழ் மாநகர சபை காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள்தெரிவித்தனர்.

## ஜனாதிபதி ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தெரிவுக்குழுக்கள் மற்றும் ஆணைக் குழுக்கள் என்பவற்றை நியமிப்பதால் மக்களின் பணமும் நேரமும் வீணடிக்கப்படுமே, தவிர நீதியை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியிலிருந்து ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவியும் மீட்பு

## இதுவரை 6 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுப்பு







முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று ஆறாவது நாளாக அகழ்வாய்வு முன்னெடுக்கப்பட்ட நிலையில், கழிவு நீரினைச் சுத்திகரித்து அருந்துவதற்குப் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றும், துப்பாக்கி ரவை ஒன்றும் தடயப் பொருட்களாகப் பெறப்பட்டுள்ளன.

இதுவரை கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் ஆறு நாள்கள் இடம்பெற்றுள்ள நிலையில், 6 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஆறாம் நாள் அகழ்வாய்வு நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த அகழ்வாய்வு தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே.எஸ்.நிரஞ்சன், தடயவியல் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் பங்கேற்புடன் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

ஆறாம் நாள் அகழ்வாய்வு தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில் –

”கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஆறாவது நாள் அகழ்வாய்வில் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி முற்றுமுழுதாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன், ஐந்தாம் நாள் பகுதியளவில் அகழந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூட்டுத் தொகுதியின் மிகுதிப் பாகங்களும் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

ஆறாம் நாள் அகழ்வாய்வில் துப்பாக்கி ரவை ஒன்றும், கழிவு நீரைச் சுத்திகரித்து அருந்துவதற்குப் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு நீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றும் தடயப் பொருட்களாகப் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்படும் மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயோ, கைகள் கட்டப்பட்ட நிலையிலேயோ மீட்கப்படவில்லை.

இந்த அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெறும்போது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சார்பில் இரண்டு சட்டத்தரணிகள் அகழ்வாய்வுகள் ஆரம்பமாகி முடிவடையும் வரை நேரடியாக நின்று பார்வையிடுகின்றனர்.

தடயவியல் பொலிஸார் அகழ்வுப் பணிகளின்போது புகைப் படங்களை எடுத்து ஆவணப்படுத்துகின்றனர்.

இவ்வாறான சூழலில் இங்கு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கைகள் கட்டப்பட்டநிலையில் எலும்புக்கூட்டுத் தொகுதிகளோ, கண்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட துணிகளோ இதுவரை இனங்காணப்படவில்லை.” – என்றார்.

## வழக்குச் சான்றுப் பொருளாக

# நீதிமன்றத்தில் இருந்த 50 கிலோ கஞ்சா மாயம்

யாழ். மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு சான்றுப் பொருளான 50 கிலோகிராம் கஞ்சா மாயமாகி உள்ளது எனத் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குச் சான்று பொருள்களுக்குப் பொறுப்பான அதிகாரியால் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சா தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் 50 கிலோகிராம் கஞ்சா களவாடப்பட்டுள்ளது அல்லது மாயமாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சான்றுப் பொருளே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இது தொடர்பான விரிவான விசாரணைகளை தெல்லிப்பளைப் பொலிஸார் மாற்றும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘சனல் 4’ ஊடாக இலக்கை அடைய தமிழ்க் கூட்டமைப்பு முயற்சியாம்

## விமலின் கட்சி கண்டுபிடிப்பு

“இலங்கை விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்ல வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரின் பிரதான இலக்காகும். இதனை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படம் ஊடாக அடைந்துகொள்ள கூட்டமைப்பினர் முயற்சிக் கிறார்கள். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.”

– இவ்வாறு விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

எதுல்கோட்டை பகுதியில் உள்ள கட்சியின் காரியாலயத் தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

”இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஊடகச் செயலாளராகப் பணிபுரிந்த ஆஸாத் மௌலானா, முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா ஆகி யோர் புகலிடக் கோரிக்கைக்காக நாட்டை சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொடுக்கின்றார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படத்தைக் கொண்டு ஒரு தரப்பினர் ராஜபக்ஷர்களைப் பழிவாங்க முயற்சிக்கின்றார்கள்.

ராஜபக்ஷர்களின் பலவீனமான அரச நிர்வாகம், ஊழல் – மோசடி என்பனவற்றால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் எமக்கும் ராஜபக்ஷக்கள் தொடர்பில் கடும் விமர்ச னங்கள் காணப்படுகின்றன.

ராஜபக்ஷக்களைப் பழிவாங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டின் புலனாய்வுப் பிரிவு மற்றும் இராணுவத்தை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றார்கள்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வழங்கிய நிதிக்கு அமைவா கவே சனல் 4 ஆரம்ப காலத்தில் இருந்து இலங்கைக்கு



எதிராகச் செயற்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் வீடியோ வெளியாகியுள்ளது.

சனல் 4 வீடியோ வெளியிட்டவுடன் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தனும் இதனையே வலியுறுத்தியுள்ளார்.

ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் போது பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல் நஷீப் “உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல் குறித்து சர்வதேச பங்களிப்பு விசாரணை அவசியம்“ என்பதை வலியுறுத் தியுள்ளார்.

இலங்கை விவகாரத்தை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரின் பிரதான இலக்காகும்.

அதை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படம் ஊடாக அடைந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றார்கள். இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.” – என்றார்.

# நல்லூரில் 17 தமிழ் அரசியல் கைதிகளுக்காக 17 தேங்காய்கள் உடைத்து விசேட வழிபாடு



– என். புவியரசன் –

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு செப்ரெம்பர் 12 ஆம் திகதி யான நேற்று

மிக நீண்டகாலமாக தடுத்துவைக்கப் பட்டுள்ள 17 தமிழ் அரசியல் கைதிகளின தும் விடுதலையை வேண்டி, “குரலற்ற வர்களின் குரல்“ அமைப்பு, நல்லூர் ஆலய முன்றலில் 17 தேங்காய்களை உடைத்து விசேட வழிபாட்டை மேற் கொண்டது.

இந்நிகழ்வில் அரசியல் கைதிக ளின் உறவினர்கள், முன்னால் அரசி யல் கைதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்ட னர்.

இதன்போது கருத்து வெளியிட்ட குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் கூறியவை வருமாறு:–

“மூன்றரை தசாப்த காலமாக நீடித்த யுத்த சூழலின் ஒற்றைச்சொல்லாக “தமிழ் அரசியல் கைதிகள்” என்கின்ற பேசு பொருள் இதுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதற்கு, அரசு உடனடியாக முற்றுப்புள்ளியிடவேண்டும். அதை விடுத்து, கவனவீர்ப்புப் போராட்டங்களி லும் கருத்துப் பரிமாற்றங்களிலும் ஈடுபட்டவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து, பின்னர் அவ்வாறானவர்களை பிணையில் விடுவித்துவிட்டு, “நாம் நூற்றுக் கணக்கா னவர்களை விடுதலை செய்துள்ளோம்“ என சர்வதேச அரங்கில் உரத்துக்கூறி வருகிறது அரசு.

ஆனால்,15முதல் 28ஆண்டுகளாக 17 தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, உண்மை நிலையை சர்வதேசம் புரிந்து கொள்ளவேண்டும்.

வெறுமனே அறிக்கையிடலோடு மாத்தி ரம் தமது மனித உரிமை செயற்பாடுகளை மட்டுப்படுத்திக. கொள்ளாது இலங்கை அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோ கிக்கவேண்டும். இதனூடாகவே

போர் ஓய்ந்த நாட்டில் நிரந்தரமான நல்லிணக்கத்தை உறுதிசெய்யமுடியும்” – என தெரிவித்தார்.

# குற்றவாளியே குற்றவாளியை விசாரிக்கும் கங்காரு நீதிமன்ற முறையால் பயனில்லை

## சர்வதேச விசாரணை மூலமே நீதி கிடைக்கும் என்கிறது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம்



(மன்னார் நிருபர்)

காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைகளை போல் கானல் நீராக உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் அமைந்து விடக்கூடாது. அறத்தின் பால் நீதியை நிலை நாட்ட சர்வதேச விசாரணையே அவசியமாகும் எனத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுத் தாம் விடுத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட தகவல் என்பது ஒரு அதிர்ச்சிகரமான விடயம் இல்லை. ஏலவே அரசியல் அரங்கில் எழுப்பப்பட்ட ஐயத்திற்கான எடுகோளோ இதனை சர்வதேச நிபுணர்களைக் கொண்டு விசாரிப்பது அவசியமாகும்.

கடந்த காலத்தில் உள்நாட்டு விசாரணைகளின் அறிக்கைகள் எப்படி வெற்றுப் பத்திரங்களாகக் காணப்பட்டன என்பதை யாவரும் அறிவார்கள்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை பௌத்த தேசியவாத மேட்டிமைத்தனம் யுத்த வெற்றி வாதம் எனும் இனவாதக் கோசம் மேலெழுந்து மூடி மறைத்தது போல், இதையும் நோக்கினால் குற்றவாளியே குற்றவாளியை விசாரிக்கும் கங்காரு நீதிமன்ற முறைமை போல் அமைந்து விடும்.

இந்த நாட்டில் நடுநிலையோடு நீதியை நிலை நாட்ட கூடிய நிபுணத்துவம் உள்ளவர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை.

அவ்வாறு இருந்திருந்தால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்திருக்கும்.

உண்மை, நேர்மை, சத்தியம், நடுநிலைமை எனும் அற வார்த்தைகள் இலங்கை அரசிற்கு எப்போதும் கசப்பானவை. ஏமாற்றுவதிலும் உண்மையை மறைப்பதிலும் அதனை நீர்த்துப் போகச் செய்வதிலும் மிகப் பெரிய வல்லமையுள்ள ஆட்சியாளர்களைக் கொண்ட நாடு.

ஆகவே இதற்கு சர்வதேச விசாரணையே பாதிக்கப்பட்ட தரப்பிற்கும் - குறிப்பாக ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்குரிய நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் - உலக அரங்கில் பயங்கரவாத ஒழிப்புக்கு உந்துதலாகவும் வெளிப்படைத் தன்மையுடையதாகவும் அமைய வேண்டும் என்பதே யதார்த்தம்.

ஆனால், பட்டவர்த்தனமாக பஞ்சமாபாதகமாக இனப்படுகொலை செய்தவர்கள், சரணடைந்தவர்களையே சுட்டு கொன்றவர்கள் பலரை காணாமல் ஆக்கியவர்களிடம் அறநீதி எதிர்பார்க்கலாமா?

தான் ஒரு கத்தோலிக்கன் என்பதையே மறந்து, பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என கூறும் சிங்கள இனவாதி கர்தினால் போன்றவர்களை இலகுவாக இனவாதத்தால் சமாளிக்கும் வல்லமையோடு உண்மையை மூடி மறைப்பதிலும் நீண்ட அனுபவமுள்ள இலங்கையின் ஆட்சியாளருக்கு ஏமாற்றுவதும் பாசாங்கு காட்டி சர்வதேசத்தை நம்பவைப்பதும் சர்வ சாதாரணமே.

எனவே தற்போதைய ஆட்சியே ஒரு திரிசங்கு நிலையில் உள்ளதால் உள்நாட்டு விசாரணை எந்தச் சந்தர்ப்பத்திலும் உகந்தது அல்ல.

கட்சி அரசியல், தேர்தல் அரசியல் கடந்து நாட்டின் எதிர்கால சந்ததியின் தொலைநோக்கு நம்பிக்கை இருப்பின் அடி நாதமாக அமைய வேண்டும்.

திட்டமிட்ட பயங்கரவாத தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கை மீண்டும் இவ்வாறு தாக்குதல் முயற்சிகள் நிகழாவண்ணம் நீதியான நிர்ண நிலை உருவாக்கப்பட வேண்டும்.

எனவே காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைகளை போல் கானல் நீராக உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் அமைந்து விடக்கூடாது.

அறத்தின் பால் நீதியை நிலை நாட்ட சர்வதேச விசாரணையே அவசியமாகும். - என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனம்: ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு




ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று மாலை அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய பயணிகள் ரயில் சேவை, பொருள் விநியோகம் ஆகிய சேவைகள் ரயில்வே திணைக்களத்தினாலும் அதனுடன் இணைந்த சேவைத் துறையினராலும் தடையின்றி, பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் சாரதிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் திங்கிட்கிழமை நள்ளிரவு முதல் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் நேற்று பயணிகள் ரயில் சேவை பாரிய நெருக்கடிக்கு உள்ளாக்கியது. நேற்று மாத்திரம் சுமார் 166 பயணிகள் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

அதிக சனநெரிசலுடன் பொதுமக்கள் ரயில் சேவையைப் பயன்படுத்தியிருந்தனர். ரயிலில் பாதுகாப்பற்ற விதத்தில் பயணம் செய்த மொரட்டுவை பல்கலைக் கழக மாணவர் ஒருவர் உள்ளடங்கலாக இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஒருவர் ரயிலில் இருந்து விழுந்து படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரயில் சாரதிகளின் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோது, -

"ரயில் சாரதிகள் சங்கத்தின் போராட்டம் முறையற்றது. இதனால் பொதுமக்கள் முகங்கொடுத்த அசௌகரியங்கள் மற்றும் ஏற்பட்ட உயிரிழப்புக்களுக்கு ரயில் சாரதிகள் பொறுப்புக்கூறவேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக உடனடியாகப் பிரகடனப்படுத்துமாறு தான் ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் வலியுறுத்தினேன் என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை ரயில் சேவையை அத்தியாவசியசேவையாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தியில் புதியவர்கள் இணைப்பு

கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் வேலைத் திட்டம் எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று மக்கள் வாழ்வதற்கான போராட்டதை முன்னெடுத்துள்ளனர். சுகாதாரத் துறை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான காரணங்களை நாம் நாடாளுமன்றத்தில் முன்வைத்தோம்.

நாட்டு மக்கள் புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றனர். கடந்த அரசாங்கம் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேச அமைப்புகள் கூறுகின்றன.

சூழ்ச்சியினாலையே கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேசம் இன்று கூறுகின்றது. நாட்டின் புலனாய்வு பிரதானிக்கு முறைபாடுகள் குற்றங்கள் எழுந்துள்ளன. எனவே நாட்டிற்கு புதிய ஆட்சி தேவை, நாட்டிற்கு பொறுப்பான நிர்வாகம் தேவை.

இந்த ஆட்சியை பொறுப்பேற்க சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஏனைய கட்சிகள் தேர்தல் தொகுதிக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது மாத்திரமே.

நாம் நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் தொகுதிக் கூட்டங்களை நடத்தி முடித்து விட்டோம். கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத்திட்டதினையும் கிராமத்திற்கு கிராமம் செல்லும் புதிய வேலைத்திட்டத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

அன்றைய தினங்களில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மாவட்டத்திற்குச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல், வாக்காளர் பிரிவு கிளைகள், மகளிர் பிரிவுகள், இளைஞர் பிரவுகள், பிக்குகள் முன்னணியின் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை அன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளனர். அடுத்த அடுத்த மாதங்களில் இந்த வேலைத்திட்டத்தை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவோம்.

நாட்டை கட்டியெழுப்புவதே ஐக்கிய மக்கள் சக்தியின் குறிக்கோள். அந்த இலக்கை வெல்வதற்கான பிரச்சாரம் செப்டம்பர் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும். நாட்டில் ஏற்பட்டுள்ள



நெருக்கடியான சூழலுக்கு முகங்கொடுக்கக் கூடிய எந்தவொரு தரப்பும் ஆளும் தரப்பில் இல்லை.

பொதுஜன பெரமுனவுக்கு கிராமத்துக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரமான பொருளாதாரக் கொள்கையைப் பற்றி நினைக்கும் போதே அவர்களுக்கு ஒரு வாக்குக் கூடக் கிடைக்காது.

அடுத்த வருடம் தேர்தலுக்கான வருடமாகும். எந்நேரத்திலும் தேர்தலை சந்திக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது. இந்தப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். - என்று தெரிவித்துள்ளார்.

# பேசுவதற்கு படகு மூலம் தமிழகத்துக்குச் செல்லும் மீனவர் தடுக்கப்பட்டால் விமானம் மூலம் பயணிப்பர்

## அதற்கு நிதி உண்டியல் மூலம் சேகரிப்பு என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



- என்.புவியரசன் -

மீனவர் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு படகு மூலம் தமிழ்நாடு செல்லும் மீனவர்களை இந்தியக் கடற்படை தடுத்தலாலோ அல்லது கைது செய்தாலோ அல்லது திருப்பியனுப்பினாலோ மாற்று ஏற்பாடாக விமானத்தில் அவர்கள் இந்தியா பயணிப்பதற்கான நிதிக்கு உண்டியல் மூலம் பணம் சேகரிக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன் பின்பு இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டு இழுவைப்படகுகள் இலங்கை கடற்பரப்புக்குள் எல்லை மீறி வந்து சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுகின்றன. இது எங்களுடைய மக்களின் வளங்களை அழிக்கின்றது. எங்களுடைய மக்களின் வாழ்வாதாரங்களை அழிக்கின்றது. எங்களுடைய மக்களின் கடல் தொழில் உபகரணங்கள் போன்றனவை அழிவடைகின்றன.

மேலும், நான் ஒரு அமைச்சராக இருந்த போதும், அமைச்சராக இல்லாத போதும் மூன்று தடவைகள் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களையும் ஈழத்து கடற்றொழிலாளர்களையும் கச்சதீவிலே சந்தித்து பேச வைத்துள்ளேன்.

தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் எங்களுடையகருத்துக்களைஏற்றுக்கொள்ளுகின்றனர். அதேவேளை அவர்கள் தங்களுக்கு ஒரு வருடம் தாருங்கள், இரண்டு வருடம் தாருங்கள் எனக் கால அவகாசம் கேட்கின்றனர்.

மேலும் இது தொடர்பில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் போது தமிழ் நாட்டில் பலத்த பிரச்சாரம் முன்னெடுக்கப் படுகின்றது. தமிழ்நாட்டில் இவற்றை கடற்படையின் பிரச்சனையாகக் காட்டப் பார்க்கின்றார்கள்.

இந்நிலையில், வடக்கை சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டிற்கு சென்று தமிழ்நாட்டு முதலமைச்சர், எதிர்க்கட்சி தலைவர், அண்ணாமலை மற்றும் தமிழ்நாட்டு கட்சிகளின் தலைவர்களை சந்தித்து இவ் விடயம் தொடர்பாக எடுத்துக்கூற வேண்டும்.

அவ்வாறு தமிழ் எம்பிக்கள் சொல்வார்களாக இருந்தால் இப்பிரச்சினை பெரும்பாலும் தீரும்.

மேலும், வடக்கைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் படகு மூலம் தமிழ்நாட்டிற்கு சென்று தமிழக முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவரைச் சந்திப்பதற்கு விரும்புகிறார்கள். இந்தச் செயற்பாட்டை இலங்கைக் கடற்படை தடுக்கலாம். அல்லது இந்தியக் கடற்படை தடுக்கலாம். அவர்கள் சில வேளை கைது செய்யப்படலாம் அல்லது திருப்பியனுப்பப்படலாம். இந்நிலையில் அதற்கு மாற்றாகப் பலாலியில் இருந்து சென்னைக்கு விமானத்தில் செல்வதற்கு ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கு மக்களிடம் உண்டியல் மூலம் பணம் சேகரிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டேன். - எனவும் தெரிவித்தார்.




# உத்தரப் பிரதேசத்தில் கடும் மழை: அனர்த்தங்களின் சிக்கி 19 பேர் பலி!

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களின் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

மாநிலத்தில் பல இடங்களிலும் பரவலாக வெள்ளநீர் தேங்கியுள்ளது. தலைநகர் லக்னோ, பாரபங்கி உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் சூழ்ந்ததால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதனால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 22 மாவட்டங்களில் சராசரியாக 40 மில்லி மீற்றர் அளவு மழை பதிவாகியுள்ளது. மொரதாபாத், சம்பல், கனோஜ், ராம்பூர், ஹத்ராஸ், பாராபங்கி, காசிகஞ்ச், பிஜ்னோர், அமோரா, பராயிச், லக்னோ, பதான், மயின்புரி, ஹர்தோய், ஃபிரோஸாபாத், பரேலி, ஷாஜஹான்பூர், கான்பூர், சிதாபூர், ஃபரூக்காபாத், லக்கிம்பூர் கேரி, ஃபதேபூர் போன்ற இடங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதற்கிடையில் நாளை வரை இந்தியா முழுவதும் பரவலாக தமானது முதல் கனமழை வரை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஒடிசாவில் ஆங்காங்கே கனமழை முதல் மிககனமழை வரை பெய்யக்கூடும். உத்தராகண்ட், கிழக்கு உத்தரப் பிரதேசம், கிழக்கு மத்தியப் பிரதேசம், விதர்பா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், நாகாலாந்து உள்ளிட்ட மாவட்டங்களில் ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பான் பிரதமரின் மனைவிக்கு பிரதமர் மோடி கொடுத்த பரிசு!



ஜப்பான் பிரதமரின் மனைவிக்கு பிரதமர் நரேந்திர மோடி காஞ்சிபுரம் பட்டுப் புடவையை பரிசாக வழங்கியுள்ளார்.

ஜி20 உச்சி மாநாடு புதுடில்லியில் கடந்த சனி மற்றும் ஞாயிறு அன்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற உலக நாடுகளின் தலைவர்களுக்கு இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி பரிசுகளை வழங்கினார். இந்த மாநாட்டின்போது குடியரசுத் தலைவர் அளித்த இரவு விருந்திற்கு ஜப்பான் பிரதமரின் மனைவி யூகோ கிஷிடா, புடவை அணிந்து வந்திருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி காஞ்சிபுரம் பட்டுப் புடவையை பரிசாக அளித்துள்ளார்.

# முதல்வரின் செயலில் உள்நோக்கம் இல்லை

ஜி 20 உச்சி மாநாட்டில் முதல்வர் பங்கேற்றதில் உள்நோக்கம் இல்லை என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 2024 மக்களவை பொதுத் தேர்தலில், சங்பரிவார் அமைப்புகளின் ஆட்சியை அப்புறப்படுத்துவதே இண்டியா கூட்டணியின் சவாலாகும். இந்தியாவில், சமீபத்தில் நடைபெற்ற 7 சட்டப்பேரவை தேர்தல்களில் 4 இடங்களில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது. அந்தவகையில் இண்டியா கூட்டணிக்கு வரவேற்பும், ஆதரவும் பெருகி வருகிறது.

அத்துடன், முதல்வர்கள் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி ஆகியோர் ஜி20 மாநாட்டில் பங்கேற்றது கூட்டணியின் கொள்கையில் பாதிப்பை ஏற்படுத்தாது. குடியரசு தலைவரின் அழைப்பின்படி முதல்வர்களாக பங்கேற்றனர். இதில் அரசியல் உள்நோக்கம் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.



# உக்ரைனின் 8 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தியது ரஷ்யா!

கருங்கடல் பகுதியில் உக்ரைனின் 8 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் போரில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளதுடன் அவற்றின் ஆயுதம் சப்ளை மற்றும் பொருளாதார உதவியால் 18 மாதங்களாக போர் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் சமீப காலமாக இரு தரப்பினருக்குமிடையில் ட்ரோன் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது.

அதன்படி ரஷ்யாவின் பிரையன்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், இதனை ரஷ்ய இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது.

இதேவேளை, கிரீமியா அருகே உள்ள கருங்கடல் பகுதியில் உக்ரைனின் 8 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## விமானத்தில் தொழில்நுட்பக்கோளாறு: அவசரமாக தரையிறக்கப்பட்ட பயணிகள்




ரஷ்யாவில் நடுவானில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக பயணிகள் விமானம் ஒன்று வயல்வெளியில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

சோச்சி நகரிலிருந்து 159 பயணிகளுடன்புறப்பட்டயூரல்ஏர்லைன்ஸ் விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டமையினால் இவ்வாறு தரையிறக்கப்பட்டுள்ளது என கூறப்படுகின்றது. இதன்போது விமானம் கிராமம் ஒன்றின் வயல்வெளியில் தரையிறக்கப் பட்டுள்ளது.

அத்துடன், விமானத்தில் பயணித்த 159 பயணிகளும், 6 பணியாளர் களும் அந்த கிராமத்திலேயே தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

மேற்கத்திய நாடுகள் விதித்த பொருளாதாரத் தடைகளால் விமான உதிரி பாகங்களை வாங்க முடியாமல் ரஷ்யா திணறி வருகிறது. இதனால் விமானங்களை பழுது பார்க்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

## போர்த்துக்கலில் வைன் நதி!

போர்த்துக்கலில் உள்ள ஸோலூன்க்கோ டே பைரரோ நகரத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை வீதிகளில் சிவப்பு வைன் நதி ஓடத் தொடங்கியுள்ளது. இந்த விடயம் அனைவரையும் ஆச்சரியத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.

நகரத்தில் உள்ள செங்குத்தான மலையிலிருந்து மில்லியன் கணக்கான லிட்டர் வைன் கீழே பாய்ந்து வீதிகளில் வழிந்தோடியுள்ளது.

இந்த நிலையில் நகரத்தின் பாதைகளில் முடிவில்லாத வைன் நதி ஓடுவதை தொடர்பில் வெளியான காணொளி தற்போது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

இந்த மர்மமான வைன் நதி நகரன் மையப்பகுதியில் உள்ள ஆலையில் இருந்து உருவானது என்றும் அங்கு 2 மில்லியன் லிட்டர் சிவப்பு வைன் கொண்ட பீப்பாய்களை சுமந்து செல்லும் தொட்டிகள் எதிர்பாராதவிதமாக வெடித்ததால் இந்த நிலை ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.09.2023

### மேஷம்

இன்று வெற்றிபெற தொடர் முயற்சி எடுக்க வேண்டும். இன்று செயல்களை நம்பிக்கையுடன் ஆற்றுங்கள். பதட்டத்தை கட்டுப்படுத்துங்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களை சுறுசுறுப்பாக வைக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் எளிதில் ஆற்ற இயலாது. கீழ் பணிபுரிபவர்களால் பிரச்சினை ஏற்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உணர்ச்சிகளை கட்டுபடுத்த கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்கள் ஆரோக்கியம் குறைந்து காணப்படும். முதுகுவலி மற்றும் செரிமானப் பிரச்சினைகள் ஏற்படும்.

### ரிஷபம்

இன்று வெற்றியைக் காண பொறுமையாக இருக்க வேண்டும். செய்யும் செயலில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம்.

பதட்டமாக இருப்பதாக உணர்வீர்கள். உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியின்மையைக் காண்பீர்கள். புரிந்துனர்வின்மையே இதற்கு காரணம். அவர் கருத்துக்கும் இடம் அளித்தால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளலாம்.

இன்று செழிப்பான நாளாக காணப்படாது. அதிர்ஷ்டத்தை விட கடின உழைப்பை நம்புங்கள். பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

### மிதுனம்

குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று நம்பிக்கையுடன் இருங்கள். சிறந்த வளர்ச்சி சாத்தியம்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும்.பணியில் வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். அதனை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

அமைதியாக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கலாம்.நீங்கள் அதிக உற்சாகத்துடன் இருப்பீர்கள்.

### கடகம்

இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும் உங்களிடத்தில் இன்று தெளிவு இருக்காது அதனால் தவறான முடிவுகள் எடுக்க வாய்ப்பு உள்ளது.

நீங்கள் இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுங்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பண வரவு சுமாராக காணப்படும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

சளி இருமல் போன்ற பாதிப்பு இருக்கும். குளிர்ச்சியான உணவுகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.

### சிம்மம்

ஆன்மீக ஈடுபாடு மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம். பிரார்த்தனை மற்றும் தியானம் மகிழ்ச்சி அளிக்கும். மனதில் உற்சாகமாகவும் முகத்தில் புன்னகையுடனும் இருங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பணியின் போது கவனம் சிதறாமல் இருக்க மனதை ஒருமித்து பணியாற்றுங்கள்.

மனதில் தோன்றும் குழப்பங்கள் காரணமாக உறவில் அதிருப்தி காண்பீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். பணத்தை கவனமுடன் கையாளவும்.

இன்று மனதில் குழப்பம் காணப்படும். சூடு சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும்.

### கன்னி

இன்று பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மக்களின் நன்மதிப்பை பெற வேண்டும். தைரியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எளிதாகப் பணியாற்ற மனதை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் காணப்படும். நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும்.

பண வரவிற்கு இது உகந்த நாள் அல்ல. பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும். பண இழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

உணவை சரியான நேரத்தில் உண்ண வேண்டும். அதிகமாக நீரைப் பருக வேண்டும். நடைப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

### துலாம்

இன்று வெற்றிக்கு உகந்த நாள். விரைவாக செயலாற்ற உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் ஆற்றலை வெளிக்கொணரும் திறமை உங்களிடம் காணப்படும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் சார்ந்த அணுகுமுறையை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான போக்கு கொண்டு இனிமையான வார்த்தைகளைப் பேசுங்கள். இதனால் உங்கள் முகத்தில் புன்னகையும் உற்சாகமும் காணப்படும்.

இன்று நிதிநிலை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் மனதில் நம்பிக்கை காணப்படும்.

இன்று நலமாக இருப்பீர்கள். திடமான ஆரோக்கியம் கொண்டிருப்பீர்கள்.

### விருச்சிகம்

இன்று சிறப்பான நாளாக இருக்கும். நீங்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் உங்கள் செயல்களைச் செய்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கிய தொடர்பு உடையவர்களிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

உங்கள் சக ஊழியர்களின் ஆதரவு உங்களை கடினமாக உழைக்க வைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக இருக்கும். உங்கள் துணையுடன் நட்பாக பழகுவீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் கிடைக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

நம்பிக்கையான உணர்வுகள் காணப்படும். இந்த அணுகுமுறை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.09.2023

## தனுசு

இன்று சுமாரான பலன்கள் கிடைக்கும் நாள். நீங்கள் அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். சகஜமான அணுகுமுறை வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். அறிவார்ந்த திட்டங்கள் மூலம் இது சாத்தியம்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வின்மையே இதற்கு காரணம். பொறுமையாக இருங்கள்.

இன்று வரவை விட செலவு அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காணப்படும். பணத்தின் தேவை இருக்கும்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருங்கள்.

## கும்பம்

இன்று சாதகமான நாளாக அமையும். உங்கள் வாழ்விற்கான பயனுள்ள முடிவுகளை எடுக்க உகந்த நாள். உங்கள் உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். பணிகளை நீங்கள் கையாளும் திறன் மூலம் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை கவர்வீர்கள்.

இன்றைய நாள் உங்கள் துணையுடன் மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவரும் புதிய விருந்தினரின் வருகைக்கு காத்திருப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். சில பயனுள்ள முதலீடுகளை நீங்கள் தேர்வு செய்யலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## மகரம்

இன்று செயல்கள் உங்கள் விருப்பம் போல நடக்காது. நேர்மறை எண்ணம் கொண்டு செயல்படுவது நல்லது. தன்னம்பிக்கையோடு உங்கள் இலக்கில் கவனம் செலுத்த வேண்டும். தனிமையாக இருப்பது போன்று உணர்வீர்கள். ஆனால் இதுவும் கடந்து போகும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டால் குறித்த நேரத்தில் முடிக்கலாம். நீங்கள் கவனமுடன் இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில விரும்பத்தகாத தருணங்களைக் காண்பீர்கள். உங்கள் பிரியமானவரின் வார்த்தைகளைக் கேட்பது நல்லது.

செலவுகள் அதிகமாக காணப்படும். பணத்தை தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்பு குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

## மீனம்

இன்று வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் இன்று தைரியமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சி நல்ல பலன்களை அளிக்கும். பயணங்களுக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். இன்று உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இன்று அதிக தன்னம்பிக்கை காணப்படும்.

உங்கள் துணையின் நன்மதிப்பை பெற இன்று உகந்த நாள். உங்கள் இருவருக்கும் இது சிறப்பா ன நாள்.

இன்று பணபுழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.

நீங்கள் இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546


JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023





## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா!

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் தோர்த்திருவிழா இன்றுநடைபெற உள்ளது. சைவத்தமிழ் மக்களின் தலையாய திருக்கோவிலாகிய நல்லூர் கந்தனின் உற்சவகாலத்தில் தேர்த்திருவிழா பெருவிழாவாக கருதப்படுகிறது. அதிகாலையில் பூசை வழிபாடுகள் நடைபெற்று காலை 7 மணிக்கு ஆறுமுகப் பெருமான். திருத்தேரில் அற்புதமாக காட்சியளிப்பார். தேரேறும் ஆறுமுகன் முற்றாக தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் காட்சி வேறெங்கும் காணமுடியாது. முருகனின் முடியில் இரத்தினங்கள் வைரங்கள் பதிக்கப்பட்டு – பார்ப்பவர்களை திகைக்க வைக்கும் அளவுக்கு கோடி ரூபாய் பெறுமதியான ஆபரணங்கள் முருகனை சிறப்பிக்கும். வாசனை நிறைந்த மல்லிகை மாலையும் தங்கமாலைகளுக்கு நடுவே காட்சியளிக்கும். ஆறுமுகப் பெருமானுக்கு தேரில் அன்று அணிகின்ற முற்றுமுதலான தங்க உருத்திராட்சம் வேறெங்கும் காணமுடியாது. முடியில் இருந்து பாதம் வரை அணி அணியாக பதக்கங்களால் சரீரம் மறைக்கப்பட்டிருக்கும். எப்படி அலங்கரிக்கிறார்கள் என்று எல்லோரையும் ஏங்கவைக்கும்.

அடியார்களின் தோளில் வீறு கொண்டு தேரை நோக்கி வரும் காட்சி வர்ணிக்க முடியாதது. பூவினுக்கருங்கலமாகிய பொங்குதாமரையை கோபுர வாயிலிலிருந்து தேரரறும் வரை மழை போல் சிந்துவார்கள். மலர் மழையில் மால் மருகன் இனிய காலையில் தேரறுவார். இந்திய சிற்பாசாரியார்களால் ஐம்பத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட அற்புதத்தோ ஆயத்தமாக நிற்கும். கொடி ஏறிய நாள்முதல் திருத்தேர் செப்புத்தகடுகளை மினுக்கத் தொடங்கிவிடுவார்கள். அதனால் தேரில் அன்று தேர்முடி தொடக்கம் சில்லு அச்சாணி வரை ஐம்பொன் உலோகங்களும் அன்று மலர்ந்த செந்தாமரை போல் அனைவரையும் ஈர்க்கும்.

தேரில் முருகன் – ஏறும் அழகு தனித்துவமானது. தேரேறும் பலகையை ஆறுமுகன் இருந்து சுற்றி பார்ப்பதற்கு வசதியாக சுலபமான முறையில் உருவாக்கியிருக்கிறார்கள். அடியவர்கள் அப்பலகையில் முருகனை இறக்கியதும் அந்தணர்கள் சுழலும் பலகையில் ஆறுமுகனை ஒருமுறை சுற்றுவார்கள். தேரேறுவதற்கு முதல் அவன் எல்லா திசையையும் சுற்றிப் பார்ப்பது போல் இருக்கும். முருகன் தேரில் ஏறும் வரை அரோகரா என்ற ஓசை வானைப் பிளக்கும்.

தேரில் முருகன் வரும் காட்சியைக் காத்திருந்து காணும் பக்தர்கள் ஆனந்த கண்ணீ சொரிவர். வடம்பிடித்து வாழ்வு கேட்பதற்காக அதிகாலை முதல் தேரடியில் திருக்கூட்டம் காத்திருக்கும். அதற்கு மத்தியில் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும் தேங்காய் தோல்வலிமை உடைய இளைஞர்கள் சில மணித்துளிகளில் உடைத்துக் குவிப்பர். தேர் புறப் படும் வரை அலைகடலுக்கு மேலே கப்பல் ஒன்று செல்வதுபோல் கந்தப்பெருமானின் தேர் மிதந்து செல்லும். பஞ்சமணி கோபுரங்கள் வடிவேலன் வருவதை அறிவிக்கும். பேரிகை முழங்கும், கற்பூரவாசனை காற்றில் கலந்து கந்தனின் வருகையை வரவேற்கும். வருடத்தில் ஒரு நாள் இக்காட்சியைக் காண்பதற்கு என்ன புண்ணியம் செய்தோம் என்று எல்லோரும் அக மகிழ்வார்கள். நான்கு வீதியிலும் வரவேற்பு பந்தல்கள் படையல்கள் வடம்பிடிக்கும் அடியவர்க்கு வயிறாறக் கொடுப்பதற்கு காத்திருப்பர்.

தேர் இருப்பிடம் வரும்போது கைகளை உயர்த்தி அப்பனே! அப்பனே! என்று பக்தர்கள் ஆரவாரிப்பர். இந்த திருவருள் காட்சியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. கண்ணாரக் கண்டு நெஞ்சார வழிபாடு செய்து பக்தர்களின் அனுபவத்தை அவரவரே உணர்வர்.


பழமையும் பெருமையும் மிக்க நல்லூர்க் கந்தனின் திருத்தேர் நாளில் எம்மண் விடிய வேண்டும் என்று மன்றாடுவோம். அதர்மத்தை அழித்து தாமத்தை நிலைநாட்ட ஆறுமுகப் பெருமானை உதவு என்று உளமார வேண்டுவோம். எங்கள் மண்ணில் நீதி நிலைத்திட வெற்றி வேலாயுதா விரைவில் காத்திடு என்று ஒன்று பட்டுப் பிரார்த்திப்போம்.


திருத்தேர் நாளில் பக்தர்களுக்கு இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ தூக்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023





# யோகர் சுவாமிகளின் நற்சிந்தனையில் நல்லூர்

சிவ பூமியாக அறியப்படும் யாழ்ப்பாணம் சித்தர்கள் பலர் நடமாடிய பேறுற்ற பூமியாகும். இந்த மண்ணில் வாழ்ந்த சித்தர்கள் வரிசையில் இடம் பெறும் யோகர் சுவாமிகள் (1872 – 1964) மிகுந்த முக்கியத்துவமுடையவர். அவர் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

செல்லப்பா சுவாமிகளின் சீடராகி சித்தராகப் பரிணமித்தவர் யோகர் சுவாமிகள். 'ஒரு பொல்லாப்புமில்லை', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாம் அறியோம்', 'முழுவதும் உண்மை' ஆகிய மகா வாக்கியங்களை உபதேசித்தும் வழிகாட்டல்களை வழங்கியும் பல அடியார்களை ஆட்கொண்டவர். சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார். இன்றுவரை அந்த அமைப்பு ஆன்மீகப் பணியாற்றி வருகின்றன. அதற்கு வழிவகுத்தவர் அவரே.

தமிழைப் பக்தியின் மொழி என்று சிறப்பிப்பர். ஏராளமான பக்தி இலக்கியங்கள் தமிழில் தேன்றியுள்ளமையே அவ்வாறு சிறப்பிப்பதற்குக் காரணமாகும். அவ்வாறான பக்தி இலக்கியங்களில் பல கோயில்களை மையப்படுத்தி எழுந்துள்ளன. அந்த வகையில் ஈழத்தின் ஆலயங்கள் சார்ந்தும் ஏராளமான இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன, படைக்கப்பட்டுவருகின்றன. அவற்றுள் கணிசமானவை இலக்கியச் சிறப்புடையவையாக அமைந்து சுவைதருகின்றன. அவ்வகையில் ஈழத்தின் புகழ்பெற்ற தலமான நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை மையப்படுத்தியும் பல இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

யோகர் சுவாமிகளுக்கு நல்லூர் முக்கியத்துவமுள்ள தலம். 'யோகநாதன்' என்ற இயற்பெயருடைய இவரை, அவரின் குருநாதரான செல்லப்பா சுவாமிகளைச் சந்திக்க வைத்து 'யோகர் சுவாமி'களாக்கிய தலம் நல்லூர். தனது குருதரிசன அனுபவத்தை

"வண்டுபண் செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் – கொண்டுவரும்
தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்து நின்றார் தேர்"

எனப் பதிவு செய்கிறார் யோகர் சுவாமிகள். அப்பதிவில் நல்லூரை வியக்கத் தவறவில்லை அவர். தனது குருநாதர் வாழ்ந்து நடமாடிய இடம் என்பதாலும் தான் குருநாதரைச் சந்தித்த இடம் என்பதாலும் தனக்கு ஞானோபதேசம் கிடைத்த தலம் என்பதாலும் ஏனையவர்களுக்கு அமைவதைவிட யோகர் சுவாமிகளுக்கு நல்லூர் முக்கியத்துவமுள்ள தலமாக அமைந்துவிடுகிறது.


யோகர் சுவாமிகளின் நல்லூர் தொடர்பான பாடல்களில் இதனை உணரலாம். யோகர் சுவாமிகள் எமக்காக விட்டுச் சென்ற அருட்பிரசாதம் 'நற்சிந்தனை'.

(III ஆம் பக்கம் பார்க்க)






# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023



# யோகர் சுவாமிகளின் நற்சிந்தனையில் நல்லூர்



(II ஆம் பக்கத் தொடர்ச்சி

நற்சிந்தனையில் நல்லூர்த் திருத்தலத்தைப் போற்றும் பாடல்கள் பலவுண்டு. அத்தோடு ஏனைய பாடல்களிலும் நல்லூரைச் சிறப்பிக்கும் செய்திகளும் தாராளமாக உண்டு.

"தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வானோர் – ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரில்
கந்தவெனச் சொல்லிக் கருது"

என்பதிலும் "எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே" என்பதிலும் நல்லூரின் பெருமையைப் பேசுகிறார் யோகர் சுவாமிகள். மேலும்,

"வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே"

என்று சிலிர்க்கிறார் அவர். "நல்லூரான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும் நம்மைப் பிரியானென நம்பிட வேண்டும்" என நல்லூரான் மீதான நம்பிக்கையை வலியுறுத்தும் யோகர் சுவாமிகள் அந்த நம்பிக்கையின் விளைவாகவே "நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு, அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" எனத் திடமாக உபதேசிக்கிறார்.

"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே
இரவு பகல் காணேனெடி"

எனத் தன்னை நல்லூரான் மெய்மறக்கச் செய்யும் அற்புதத்தையும் வெளிப்படுத்திச் செல்கிறார்.

அண்டங்களை ஆளும் இறைவன் நல்லூரில் எழுந்தருளினான் என்பதை "எல்லாவுலகமுமான பரம்பொருள் நல்லூரில் வந்தானென்று உந்தீபற" என்ற அடிகளில் சுட்டிக்காட்டிய சுவாமிகள், 'நடந்து போவோம்' எனத் தலைப்பிடப்பட்ட "நல்லைப் பதிக்கு நேராய் நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்" என அடியாரை அழைக்கும் பாடலில் தொல்லையையும் துன்பத்தையும் தரும் ஊழ் அகன்று போகும் கல்லைப் போன்ற மனம் கணத்தில் கரைந்து போகும் அதனால் நல்லைப் பதிக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். அவர்

"வறுமைப் பிணிக்கு மருந்தொன் றிருக்குது
வந்து பாருங்கள் நல்லூரில்
வந்து மருந்தை அருந்திய மாதவர்
வாழ்ந்தார் வாழ்ந்தார் வாழ்ந்தாரே"

என்று நல்லூரை அடைந்து பேறுற்றவர்களைச் சான்றாக்கிப் பேசுவதைக் காண்கிறோம். அவ்வாறே

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் – நல்லமயில்
ஏறிவந்து காட்சிகொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி"

என்றும் "நல்லூர் எனும்பதியை நாடித் தரிசித்தால் பல்லூழி வாழலாம் பார்" என்றும் உரைப்பதில் யோகர் சுவாமிகளின் தளராத உறுதியைப் பார்க்கிறோம். "நல்லைப் பதக்கரசே நல்லைப் பதிக்கரசே நல்ல வழிகாட்டி நாயேனை ஆண்டிடடா" என்பதில் நல்லூரானிடம் சரணாகதியடையும் அடியவரைத் தரிசிக்கிறோம்.

நற்சிந்தனை என்ற தொகுப்பில் நிறைந்து கிடக்கும் யோகர் சுவாமிகளின் அருட்படையல்களில் நல்லூர்ப் பதியின் சிறப்பையும் அங்குறையும் கந்தனின் சிறப்பையும் சுட்டும் சொற்றொடர்கள் பரந்திருப்பதனைக் காணலாம். 'வளஞ்சேரும் நல்லூர்', 'விளங்கும் நல்லூர்', 'திருவார் நல்லூர்', 'நன்றுடைய நல்லூர்', 'நல்லைப் பழம்பதி' என்பவை நல்லூர்த் தலத்தின் சிறப்பினைப் பேசுகின்றன. நல்லூர்ப் பதிக்கே சிறப்பருளும் கந்தனின் பெருமையை 'மணக்குஞ் சோலை நல்லூர் வாசா', 'எழிலார் நல்லூர் வாழும் வாசனே', 'தூயநிலை அருளவல்ல நல்லைநாதன்', 'நல்லவருள் தந்த நல்லூரா', 'நல்லூரில் வாழ்வே நாயகமே' என்ற தொடர்கள் வியக்கின்றன. மேலும் 'வணங்கும் யோக சுவாமி நேசனே', 'ஏத்தும் யோக சுவாமி நேசனே', 'சிவயோக நாதனுக் குற்றவன்' என்ற தொடர்களில் தனக்கும் நல்லூரானுக்குமான உறவைப் பதிவு செய்யவும் யோகர் சுவாமிகள் தவறவில்லை.

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை ஆன்மீக நாட்டமுள்ளவர்களுக்கு பெருவிருந்தாகும். ஓதவும் ஈடுபட்டு சிலிர்க்கவும் மட்டுமன்றி நற்சிந்னைப் பாடல்கள் கூறும் விடயங்களை மனங்கொண்டு, சிந்தித்து உணரவும் ஆழ்ந்து திழைக்கவும் முடிந்தால் பெரும் பயன் எமக்காகும். நற்சிந்தனை பேசும், படம் பிடிக்கும் நல்லூரைப் பற்றி ஏராளம் பேசவும் விரித்து ஆராயவும் இடமுண்டு. யோகர் சுவாமிகளைத் தாண்டி இன்னும் பலர் நல்லூரைப் பாடியுள்ளார்கள், பாடிவருகிறார்கள். நல்லையைப் பாடிய அவ்வாறான இலக்கியங்கள் தொடர்பிலும் எம் தேடல் விரியவேண்டும்.

**- துணவியூர் கேசவன்**









# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023










# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023



# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.




"வீதிச்சட்டங்களை கடைப்பிடிப்போம். வாகன விபத்துக்களை தவிர்ப்போம்"


- எழுத வாசிக்க முடியாதவர்களுக்கு விசேட வாய்மொழிப் பரீட்சை ஒழுங்கு செய்து தரப்படும்.
- விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள்.
- உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புகள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- கனரக வாகனப் பயிற்சி.

## தலைமையகம்

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 0777 399 480

## கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |



# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023


## தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்

## S.V.முருகேசு




தூய்மையானதும்
நீண்ட காலம்
பாவிக்க
கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு

LITRO GAS




**S.V.M (PVT) LTD**
122, Damstreet, Colombo-12.

**SVMURUGESU**
154, Hospital Road, Jaffna.

**SVMURUGESU ( PVT) LTD**
106, Hospital Road, Jaffna.

**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.

**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.


**S.V.M. ENTERPRISE (PVT) LTD**
288, A9 Road, Karadipokku, Killinochi.

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023






# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023





உன்னை வேண்டிடும்
அடியார்க்கு
அருள் புரிவாயாக...

சேவற் கொடியோனே
சிங்கார வேலவனே
மாதவன் மருமகனே
மகேஸ்வரன் மைந்தனே
ஐங்கரன் தம்பியே
ஆறுமுகத்தோனே
அவ்வைக்கு ஆசானே
அறுபடை வீடுடையோனே
அமரர் தலைவனே
ஆண்டியாய் நின்றவனே
தமிழ்க் கடவுளே
தகப்பன் சாமியே
பிரம்மனுக்கு தண்டனை அளித்தாய்
பரமனுக்கு பொருள் உரைத்தாய்
வள்ளியை மணம் புரிந்தாய்
வானவர் துயர் தீர சூரனை வதம் செய்தாய்
வேலுண்டு வினையில்லை
உன்னை வேண்டிடும் அடியார்க்கு
ஒருபோதும் துயரில்லை வடிவேலா
சரணம் சரணம்..................



நல்லூர்க் கந்தனின் அருளால்
நாட்டில் வளம் கொழிக்கட்டும்!

நல்லூர் தேர்த்திருவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்!

RANJANAS ESTD 1946
ரஞ்சனாஸ்
பிரைவேட் லிமிட்டட்

127, மெயின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி: 0112320824, 0112320834,
0112320900
Mail: info@ranjanas.lk Web: www.ranjanas.lk



நல்லையில் வீற்றிருந்து
நல்லாட்சி புரியும் கந்தவேல்!

நல்லூர்க்கந்தனின் அருள்
அனைவருக்கும் உரித்தாகட்டும்!!

Ram Bros

ராம் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
140, மெயின் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி:0112320127, 0112447698
தொலைநகல்:0112543424

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023

அழகின் வடிவம் கண்டு
அளவில்லா ஆனந்தத்தில்
அடியேனின் எழுதுகோலும்
ஆர்ப்பரித்துக்கொண்டது
அருள்வேலனை அலங்கரிக்க
எனைக்காத்து
எந்தன் சிந்தையில்
எப்பொழுதும் வீற்றிருக்கும்
எம்பரம்பொருளே
எம்முருகனே!

உனைத் தேடி வரும்
பக்தர்களுக்கு
அருள் பாலிப்பாயாக...





## நல்லூர்க்கந்தனின் அருள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!!

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்!

No. 99, Main Street, Colombo 11.
Tel : 2446023

Web : www.saritatex.com
www.facebook.com/saritatextorium

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023






நல்லூர்க்கந்தனுக்கு அரோகரா!!





தேர்த்திருவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்!

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.


29/2, ஷெனல் கட்டிடம்,
விஷாகா வீதி, கொழும்பு 04.
தொ.: 011 255 2277
www.liclanka.com

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023



"வெற்றி புனை நெற்றி திறந்திட
சுற்றி வடம் பற்றி இழுத்திட
வற்றி இருள் வெட்டி அழித்திடும் கதிரோனே
ஒற்றைப் பிடி கற்றைப் பிடித்திட
இச்சைத் துயர் பற்றி எரிந்திட
ஒட்டிப் பொருள் தட்டிக் கூறிடும் அழகாக"
**(கவிஞன் சிவம்).**






நல்லூர் கந்தனின் அருள் அனைவருக்கும் உரித்தாகட்டும்!
தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்!

DEVI
JEWEL OF THE ISLAND

Devi Jewellers Pvt.Ltd
131, Sea Street, Colombo - 11 | Ph: 0713131131
/ devijewellerslk / devi_jewellers | devijewellers.lk




நல்லையில் வீற்றிருந்து
நல்லாட்சி புரியும் கந்தவேள்!

நல்லூர் தேர்த்திருவிழா சிறப்புற
வாழ்த்துகிறோம்!

LAE

Little ASIA


Dream Big, Think Big, Achieve Big

Wellawatte / Pettah

No,317,317A,Galle Road Wellawatte,Colombo 06,
T.P-2504470
No,73,75A, Main St, Colombo 11,
T.P- 0112391745

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023








நல்லூர் கந்தனின்
ஆசிர்வாதம்
உங்களுக்கும்

NORTH WALL
ENGINEERING

உங்கள் அனைத்து
கட்டுமான தேவைகளுக்கு
இன்றே நாடுங்கள்

0777 818 207 / 0774 002 766

நல்லூர், யாழ்ப்பாணம்

# நல்லூர் தேர்த் திருவிழா சிறப்பு மலர் 2023

